Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 049 | செவ்வாய்க்கிழமை Tuesday | 19.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# சீரான மின் விநியோகம் வழங்க வேண்டும்

## மின்துறை அதிகாரிகளுடன் முதலமைச்சர் விஜய் முக்கிய ஆலோசனை



சென்னை:
சீரான மின் விநியோகம் வழங்க வேண்டும், மின்வெட்டு குறித்து முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என மின்வாரிய துறை அதிகாரிகளுக்கு முதலமைச்சர் விஜய் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் சி. ஜோசப் விஜய், தலைமை செயலகத்தில் பல்வேறு முக்கியத்துறை அதிகாரிகளுடன் இன்று தீவிர ஆலோசனை மேற்கொண்டார். அந்த வகையில், தமிழ்நாடு மின்வாரிய துறை அதிகாரிகளுடன் அவர் ஆலோசனையில் ஈடுபட்டார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய வழிக்காட்டுதல்களை முதலமைச்சர் விஜய், அதிகாரிகளுக்கு வழங்கியதாக தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, இலவச மின்சார திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக முக்கிய ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், சீரான மின் விநியோகத்தை உறுதிப்படுத்துவது, மின்வெட்டிற்கு முன்பாகவே அதுகுறித்த அறிவிப்புகளை பொதுமக்களுக்கு தெரிவிப்பது தொடர்பான அறிவுறுத்தல்களை மின்வாரிய அதிகாரிகளுக்கு இன்றைய ஆலோசனைக் கூட்டத்தில் முதலமைச்சர் விஜய் வழங்கியதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல் குமார், நிதித்துறைசெயலர் சித்திக், மின்வாரிய தலைவர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

முதல் கையெழுத்து

2026 சட்டப்பேரவை தேர்தல் வாக்குறுதியில், 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என தவெக தலைவர் விஜய் அறிவித்திருந்தார். இதன்படி, தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றதும், முதலில் இந்த திட்டத்திற்கே அவர் கையெழுத்திட்டார்.

200 யூனிட் இலவச மின்சாரம்

இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை மின்சாரம் பயன்படுத்தும் குடும்பங்களுக்கு 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும்.அதேநேரம்,500யூனிட்களுக்கு மேல் பயன்படுத்தினால் 100 யூனிட் இலவசம் என்ற பழைய திட்டம் தொடரும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது. தொடர்ந்து, மே 10 ஆம் தேதியில் இருந்து 200 யூனிட் இலவச மின்சாரம் கணக்கிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

மின்சார வாரிய பொறியாளர்களுக்கான அறிக்கை

இந்த சூழலில் கடந்த சனிக்கிழமை (மே 16) அன்று, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக அனைத்து மாவட்ட மின் பொறியாளர்களுக்கும் ஓர் அறிக்கை அனுப்பப்பட்டது. அந்த அறிக்கையில், "கட்டண மென்பொருளில், தகுதி சரிபார்ப்பு, மானியக் கணக்கீட்டு முறை,கட்டணப் பட்டியல் உருவாக்கம் மற்றும் கணக்கியல்/அறிக்கை விதிகள் தொடர்பான, தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கட்டண மென்பொருளில் செயல்படுத்தப்பட்டுள்ள புதிய கூடுதல் மானிய விதிமுறை குறித்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்குதெரிவிக்கபொறியாளர்களுக்கு அறிவுறுத்தல் மேற்கொண்டு, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை 500 யூனிட்கள் வரை மின்சாரம் பயன்படுத்தும் தகுதியுள்ள வீட்டு உபயோக நுகர்வோருக்கு மே 10 முதல் 200 யூனிட்கள் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும்.

இரு மாதங்களுக்கு ஒருமுறை 500 யூனிட்களுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் நுகர்வோர்களுக்கு, தற்போதுள்ள கட்டண நடைமுறையிலேயே, அதாவது, 100 யூனிட்கள் இலவச மின்சார திட்டத்தை வழங்க வேண்டும்" என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு மின்வாரிய துறை அதிகாரிகளுடன் முதலமைச்சர் ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

# “இன்ஸ்டாகிராமை பயன்படுத்தி ஆட்சிக்கு வந்துள்ளனர்”

# த.வெ.க.வை சாடிய தி.மு.க. தலைவர் ஸ்டாலின் பேச்சு



தஞ்சை: "சமூக வலைதளங்கள், இன்ஸ்டாகிராமை பயன்படுத்தி சிறு பிள்ளைகளை, குழந்தைகளை பிரச்சாரம் செய்ய வைத்து, அவர்களின் வீட்டில் உள்ள பெரியவர்கள், பெற்றோர்களிடம் பிரச்சாரம் செய்ய வைத்து திட்டமிட்டு வாக்களிக்கச்செய்து ஆட்சிக்குவந்துள்ளனர். அது நம் கண்ணுக்கு தெரியாமல் போய்விட்டது" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தஞ்சையில் பூண்டி கலைவாணன் இல்ல திருமண நிகழ்வில் கலந்துகொண்டு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: தோல்வி, வெற்றி இரண்டையும் சமமாக கருதி பாடுபடும் இயக்கம் திமுக. நடந்து முடிந்த தேர்தலில் திமுக படுதோல்வி அடைந்துவிட்டதை போல, இத்துடன் திமுக முடிந்துவிட்டது என இரங்கற்பா பாடுவதற்கு சிலர் முன்வந்துள்ளனர். நம்முடைய இன எதிரிகள் அந்த சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால்,திமுக இதுவரை எத்தனையோ தேர்தல்களை பார்த்துள்ளது. 1949ல்தொடங்கியதிமுக, பல தேர்தல்களை சந்தித்து வெற்றியையும், தோல்வியையும் பெற்றுள்ளது.

தோல்வியடையும்போதுதான் திமுக ஃபீனிக்ஸ் பறவையாக எழுந்திருக்கிறது.இங்கே பேசியவர்கள், மேடையில் உள்ளவர்கள் மற்றும் எதிரில் உள்ளவர்கள் எல்லோரும் சோகமாக இருப்பதுபோல் உள்ளனர். நாம் சோகமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.நாம்தான் இன்றைக்கும் ஆட்சியில் இருக்கிறோம்.5 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தபோது எல்லா தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியது திமுக அரசு.

நாம் வெற்றி வாய்ப்பை இழந்து, புதிய ஆட்சி அமைந்தபோது,அவர்களுக்கு வாழ்த்து சொன்னேன். அப்போது, திமுக நிறைவேற்றிய திட்டங்களை தொடர வேண்டும் எனச்சொன்னேன். அதன்படி நாம் வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருப்பதை கண்கூடாகப் பார்க்கிறோம். அதனால்தான் இப்போதும் நாம் தான் ஆட்சியில் இருக்கிறோம் என்று சொன்னேன்.நாம் செய்த சாதனைகளை எல்லாம் யாராலும் மாற்றிட முடியாது. நாம் கொண்டுவந்த இந்த திட்டங்கள் நடக்கும் வரை திராவிட மாடல் தான் தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும்.

இந்த தேர்தலில் தோல்வியடைந்ததும் நான் சோர்வடையவில்லை. நாம் எப்படி வெற்றி வாய்ப்பை இழந்தோம் என்பதை ஆராய ஒரு குழுவை அமைத்துள்ளோம். அந்த ஆய்வின் போது, நம்மிடம் என்ன பிரச்சினை, என்ன குறை எனக் கேட்டறியப்படும். இதற்காக ஒரு இணையதளமும் தொடங்கியுள்ளோம். அதில் அனைத்து தரப்பினரும் தங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம்.

தேர்தலுக்கு முன்பாக மக்களை சந்தித்து பல்வேறு பணிகளை திமுக செய்தது. ஆனாலும் ஏன் ஆட்சிக்கு வர முடியவில்லை?.ஆனால், தேர்தலுக்குஎந்தப்பணிகளையும் செய்யாமல், மக்களை கூட சந்திக்காமல், பாக முகவர்கள், பூத் ஏஜெண்டுகள், வாக்கு எண்ணும் ஏஜெண்டுகள் கூட நியமிக்காமல் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துள்ளார்கள். அது தவறு இல்லை.

அவர்களின் வெற்றிக்கு காரணம் சமூக வலைதளம். இன்ஸ்டாகிராமை பயன்படுத்தி சிறுபிள்ளைகளை, குழந்தைகளை பிரச்சாரம் செய்ய வைத்து, அவர்களின் வீட்டில் உள்ள பெரியவர்கள், பெற்றோர்களிடம் பிரச்சாரம் செய்ய வைத்து திட்டமிட்டு வாக்களிக்க வைத்து ஆட்சிக்கு வந்துள்ளனர். அது நம் கண்ணுக்கு தெரியாமல் போய்விட்டது. இனி நாம் உஷாராக இருந்து அதையும் முறியடிக்கதிட்டங்களைதீட்டியுள்ளோம். எனவே நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. மீண்டும் நாம்தான் ஆட்சிக்கு வருவோம் என்று பணியாற்றுங்கள்.

நாம் இன்னும் 5 ஆண்டுகள் ஆட்சியில் இருந்திருந்தால், பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கலாம் என்பதே எங்கள் கவலையாக உள்ளது. ஆனாலும், எதிர்க்கட்சியாக சிறப்பாக செயல்படுவோம்." என்று கூறினார்.

வரி விளம்பரங்கள்

தினத்தளம்
DHINATH DHALAM
மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்
தொடர்புக்கு : ☎ +919444082959

# கள்ள நோட்டு வழக்கு: கோவை குண்டுவெடிப்பு வழக்கு கைதி உட்பட 3 பேர் கைது



கோயம்புத்தூர்: 200 ரூபாய் கள்ள நோட்டுகளை அச்சிட்டு புழக்கத்தில் விட முயன்ற 3 பேரை போலீசார் கைது செய்தனர்.அவர்களிடமிருந்து ரூ.36,800 மதிப்பிலான கள்ளநோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

தமிழ்நாட்டில் போதைப்பொருட்களின் புழக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் போலீசார் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, கல்வி நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா தலங்களின் அருகே போதைப்பொருட்களின் புழக்கம்அதிகமாகஇருப்பதால், அந்த பகுதிகளில் போலீசாரின் கண்காணிப்பு தீவிரப்பபடுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் அதிகமாக உள்ள கோவையில் போதை மருந்துகளை கட்டுப்படுத்த போலீசார் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, உயர் கல்விக்காகபல்வேறு பகுதிகளிலிருந்தும் கோவைக்கு வந்து அறைகள் எடுத்து தங்கியுள்ள மாணவர்களின் விடுதிகள் மற்றும் அறைகளில் போலீசார் அவ்வப்போது திடீர் சோதனை மேற்கொண்டு போதைப் பொருட்களை கைப்பற்றி வருகின்றனர்.

இந்நிலையில், கோவை சுந்தராபுரம் பகுதியிலுள்ள குறிச்சி ஹவுசிங் யூனிட் பகுதியில் சட்ட விரோத செயல்கள் நடப்பதாக சுந்தராபுரம் காவல் துறையினருக்கு தகவல் கிடைத்தது. இந்த தகவலின் பேரில்,குறிச்சிஹவுசிங் யூனிட் பகுதியில் வசித்து வரும் சதாம் உசேன் மற்றும் அவரது நண்பர் பைசல் ஆகியோரை பிடித்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

இல்லத்தில் நடத்திய சோதனையில் வீட்டிலிருந்து 150 டபென்ட்டால் மாத்திரைகள், ஒரு கிராம் மெத்தபெட்டமைன் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் அவர்களிடமிருந்து 36 ஆயிரத்து 800 ரூபாய் மதிப்பிலான 200 ரூபாய் கள்ள நோட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

200 ரூபாய் கள்ள நோட்டுகளை அவர்கள் பிரிண்டர் உதவியுடன் அச்சிட்டு புழக்கத்தில் விட இருந்தது விசாரணையில் தெரிய வந்தது. இவர்களுக்கு இந்த பிரிண்டரை காஜா மொய்தீன் என்பவர் வாங்கி கொடுத்திருப்பதும் விசாரணையில் தெரிய வந்தது.இதனையடுத்து அவரையும் போலீசார் கைது செய்தனர்.

காஜா மொய்தீன் என்பவர் ஏற்கெனவே கோவை குண்டுவெடிப்பு வழக்கில் 64வது குற்றவாளியாக சிறை தண்டனை அனுபவித்து வெளியில் வந்தவர். பிரிண்டர் மற்றும் கள்ள நோட்டுகளை பறிமுதல் செய்த போலீசார், அவர்கள் மூன்று பேர் மீதும் போதைப்பொருள் தடுப்புச் சட்டம் உட்பட 8 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள, ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் சார்பாக, இரண்டு நாள் சுகாதார விழிப்புணர்வு கண்காட்சி

# கோவை ப்ருக்ஃபீல்டு வணிக வளாகத்தில் நடைபெற்றது

உலக ஆஸ்துமா தினம் மற்றும் உலக செரிமான ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு, நுரையீரல் மற்றும் இரைப்பை குடல் நோய்கள் குறித்தவிழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், கோயம்புத்தூர்

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை சார்பில் இரண்டு நாள் சுகாதார விழிப்புணர்வு கண்காட்சி புரூக்ஃபீல்ட் வணிக வளாகத்தில் தொடங்கியது.

தொடக்க விழாவில் எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாகஅறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன், இக்கண்காட்சியை ரிப்பன் வெட்டி துவங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அறக்கட்டளையின் தலைமைச் செயல் அதிகாரி சி.வி ராம்குமார், தலைமை நிர்வாக அதிகாரி மகேஷ்குமார், ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர் ராஜகோபால், மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் அழகப்பன், இணை மருத்துவக் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து இக்கண்காட்சி குறித்து எஸ்என்ஆர் அறக்கட்டளையின்

நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது..

மருத்துவமனையின் எல்லைகளைத் தாண்டி, பொதுமக்கள் அதிகம் கூடும் இடமான வணிக வளாகத்தில் இந்த நிகழ்வு நடத்தப்படுவது பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும்,

ஸ்ரீ ராமகிருஷ்ணா இணை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் உருவாக்கிய நேரடி செயல் மாதிரிகள் கண்காட்சியின் முக்கிய ஈர்ப்பாக அமைந்துள்ளது என்றார்.

சுவாசம் மற்றும் செரிமானம் தொடர்பான சிக்கலான மருத்துவக்கருத்துகளைச் சாமான்ய மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இந்த மாதிரிகள் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும்,

நுரையீரல் பாதிப்பு மற்றும் செரிமானக் கோளாறுகளுக்கான அறிகுறிகள், தடுப்பு முறைகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்வியல் மாற்றங்கள் குறித்து மாணவர்களும் மருத்துவர்களும் பொதுமக்களுக்கு விளக்கமளித்தனர்.

உயர்தர மருத்துவச் சேவையுடன், சமூகப் பொறுப்புணர்வுடன் விழிப்புணர்வுப் பணிகளையும் முன்னெடுப்பதில் ஸ்ரீ ராம கிருஷ்ணா மருத்துவமனை எப்போதும் முன்னிலை வகிக்கிறது என்பதை இந்நிகழ்வு உறுதிப்படுத்தியுள்ளதாகவும்,

இக்கண்காட்சி மே16, மற்றும் 17 ஆகிய இரு நாட்கள் புரூக்ஃபீல்ட்ஸ் வணிக வளாகத்தில் நடைபெறும் என்றார்.





## சிவகங்கை எம்.எல்.ஏ. குழந்தைராணி நாச்சியாருக்கு சிறப்பான வரவேற்பு

சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார்நேற்றுதனதுசொந்த ஊரான சிவகங்கைக்கு வந்தார். அவரை கட்சியின் மாவட்டச் செயலாளர் திரு, முத்துபாரதி தலைமையிலும் சிவகங்கை நகர செயலாளர் தளபதி கோபி முன்னிலையிலும் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொகுதிமக்கள் சிறப்பான வரவேற்பு கொடுத்தார்கள். பின்னர் எம்.எல்.ஏ சிவகங்கை நகரில் உள்ள தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து தொகுதி மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார். இதன் பின்னர் சிவகங்கையில் உள்ள ஒரு தனியார் மகாலில் நடந்த வரவேற்பு நிகழ்வில் அவர் கலந்து கொண்டார். அங்கு அனைவருக்கும் மதிய விருந்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில்.... கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் நகர நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் வார்டு மற்றும் கிளை நிர்வாகிகள் பூத் நிர்வாகிகள் கிராமநிர்வாகிகள் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும்தொகுதிமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



சேலம் மாவட்ட ஆட்சித்தலைவராக இளம்பகவத், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (18.05.2026) பொறுப்பேற்றுக்கொண்டார்கள்.



குமரி மாவட்டம் திற்பரப்பு சுற்றுலா தளம் கடையால் படகுத்துறை பகுதியில் மூடப்பட்டுள்ள கழிவறை. சுற்றுலா பயணிகளுக்கு மிகுந்த சிரமத்தை கொடுக்கிறது. காலதாமதம் செய்யாமல் விரைந்து நடவடிக்கை எடுக்க கோரிக்கை.

## இரத்தினம் குளோபல் பல்கலைக்கழக துவக்க விழா, தரமான கல்வி, தொழில்நுட்பம், தொழில் முனைவோர் வளர்ச்சி என

# சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்பட உள்ளதாக இரத்தினம் கல்வி குழுமங்களின் தலைவர் மதன் ஏ.செந்தில் பேச்சு




கோவை ஈச்சனாரி பகுதியில் உள்ள, இரத்தினம் குழும கல்வி நிறுவனங்கள், இரத்தினம் குளோபல் பல்கலைகழகமாக புதிய பெயரில் புதிய பல்கலைக்கழக அடையாளத்துடன் செயல்படவுள்ளது...

இந்நிலையில் இதற்கான துவக்கவிழா இரத்தினம் கிராண்ட் ஹால் வளாகத்தில் நடைபெற்றது..

விழாவில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து கல்வியாளர்கள், பல்வேறு தொழில் முனைவு துறைகளை சேர்ந்த தொழிலதிபர்கள் என பலர் கலந்து கொண்டனர்...

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மதன் ஏ செந்தில் யூஜிசி 2023 விதிமுறைகளின் கீழ் தமிழகத்தில் முதன்முறையாக நிகர்நிலைப் பல்கலைக்கழகம் அந்தஸ்தைப் பெற்ற கல்வி நிறுவனமாக இரத்தினம் குளோபல் பல்கலைக்கழகம் அறிமுகமாகி உள்ளதாக குறிப்பிட்ட அவர், இரத்தினம் குளோபல் பல்கலைக்கழகம், கல்வி, தொழில்நுட்பம், தொழில் முனைவோர் வளர்ச்சி ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் புதிய கல்வி சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் என நம்பிக்கை தெரிவித்தார்....

இரத்தினம்கல்விநிறுவனங்கள் நீண்ட வருடங்களாக கல்வித்துறையில் சேவையாற்றி வருவதாக கூறிய அவர்,தற்போதைய நவீனதொழில் நுட்பத்திற்கு ஏற்ப புதிய பாடத்திட்டங்களை உருவாக்க இருப்பதாக தெரிவித்தார்.

குறிப்பாக எதிர்கால தலைமுறைக்கான புதுமையான கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் இந்த பல்கலைக்கழகம் செயல்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்... இந்த சந்திப்பின் போது இரத்தினம் கல்வி குழுமங்களின் சி.இ.ஓ.மாணிக்கம்,சி.பி.ஓ.நாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 8 மாதமாக விருத்தாச்சலம் பெரிய கோவிலில் மாபெரும் அன்னதானம் வழங்கும் சமூக ஆர்வலர் இளையராஜா

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் அருள்மிகு பழமலைநாதர் திருக்கோவிலுக்கு வரும்ருக்குச்சிறப்பான முறையில் அன்னதானம் வழங்கப்பட்டது.

ஓம் சக்தி ரியல் எஸ்டேட் உள்ளிட்ட பல்வேறு தொழில் நிறுவனங்களை வெற்றிகரமாக நிர்வகித்து வரும் இவர், கடந்த ஏழு மாதங்களை நிறைவு செய்து எட்டாவது மாதமாகத் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் இந்த மாபெரும் அறப்பணியைச் சோர்வின்றி செய்து வருகிறார்;

இவருடைய இந்தத்



வெளியூர் பக்தர்களின் பசியைப் போக்கும் அரிய சேவையாக, சமூக ஆர்வலரும் பாஜக மாவட்ட ஓபிசி அணி பொதுச் செயலாளருமான ஏ.கொளப்பாக்கம் இளையராஜா தலைமையில் நேற்று (மே 16) 200-க்கும் மேற்பட்டோதொடர் சேவையைக் கண்டு வியக்கும் பக்தர்களும் பொதுமக்களும், அவருக்கும் அவரது குழுவினருக்கும் தங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் நெகிழ்ச்சியோடு தெரிவித்துச் செல்கின்றனர்.



தென்காசி மாவட்ட திராவிடகழகம் சார்பில் நீட்தேர்வை முற்றாக ரத்துசெய்யக்கோரி மாபெரும் ஆர்ப்பாட்டம் புதிய பேருந்துநிலையம் அருகில் வைத்து நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் SDPI கட்சியின் மாவட்ட செயலாளர் அப்துல்பாசித் கலந்து கொண்டு ஏழை, எளிய மாணவ, மாணவிகளின் மருத்துவக்கனவை சிதைக்கும் நீட்தேர்வின் பாதிப்புகள் குறித்து கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் திமுக மாவட்ட செயலாளர் ஜெயபாலன்,நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் M.P., நகர்மன்ற தலைவர்சாதிர்,இளைஞரணி அப்துல்ரஹீம்,SDPIகட்சியின்தொகுதி அமைப்புசெயலாளர் அப்துல்காதர் @அபு, நகர செயலாளர் ஷேக்மைதீன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## ஆண்டிப்பட்டி அருகே வனப்பகுதியை யொட்டியுள்ள

# விவசாய நிலங்களில் விவசாயம் சார்ந்த பணிகளை மேற்கொள்ள லஞ்சம் கேட்பதாக

### வனத்துறை ரேஞ்சர் உள்ளிட்ட மூவர் மீது விவசாயி புகார்

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே மயிலாடும்பாறை பகுதியில் பல ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடைபெற்று வருகிறது இதில் கடமலைக்குண்டு பகுதியைச் சேர்ந்த சிலம்பரசன் என்பவருக்கு சுமார் 6 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது இந்த விவசாய நிலத்தை சீரமைத்து விவசாயம் செய்யும் பணியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஈடுபட்டு வந்துள்ளார்

இதற்காக விவசாய நில சீரமைப்பு பணிக்காக



ஜேசிபி உள்ளிட்ட வாகனங்களை அனுமதிக்காமல் வனத்துறையினர் தடுத்து நிறுத்தி உள்ளனர் இதுகுறித்து வனத்துறை அலுவலர்களிடம் சிலம்பரசன் கேட்டபோது வனப்பகுதிக்கு அருகே உள்ள நிலம் என்பதால் மாவட்ட ஆட்சியர் மற்றும் தங்களிடம் அனுமதி பெற வேண்டும் என தெரிவித்துள்ளதாகவும் இதற்கு ஆறு மாதம் வரை ஆகும் எனவும் தங்களுக்கு 3 லட்சம் பணம் கொடுத்தால் விவசாய பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிப்பதாக தெரிவித்ததாக விவசாயி சிலம்பரசன்தேனிமாவட்டஆட்சியர்அலுவலகத்தில் வனத்துறை ரேஞ்சர் மீது புகார் அளித்துள்ளார்

விவசாய பணிகளை மேற்கொள்ள தன்னிடம் 3 லட்சம் ரூபாய் பணம் லஞ்சம் கேட்டதாகவும், தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என தெரிவித்த போது 1.5 லட்சம் ரூபாய் கேட்ட நிலையில் 1 லட்சம் ரூபாய் பணத்தை கொடுத்து 50 ஆயிரம் பணத்தை ஒரு வாரத்தில் கொடுப்பதாக கூறிவிட்டு வந்ததாகவும் தெரிவித்தார், பின் 50 ஆயிரம் ரூபாய் பணத்தை கொடுத்த நிலையில் மேலும் 2 லட்சம் ரூபாய் பணம் கொடுத்தால்தான்விவசாயபணிகளைமேற்கொள்ள அனுமதி அளிப்பேன் என ரேஞ்சர் சிவாஜி என்பவர் கூறியதாகவும் இல்லை என்றால் உங்கள் மீது வழக்கு போடுவேன் என மிரட்டியதாக புகாரில் தெரிவித்துள்ளார்

வனப்பகுதியை ஒட்டி உள்ள அனைத்து விவசாய நிலங்களிலும் விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு வனத்துறையினர் பல்வேறு இடையூறுகளை செய்து பணம் கேட்டு மிரட்டி விவசாயம் செய்யவிடாமல் தடுப்பதாக ரேஞ்சர் சிவாஜி, வன அலுவலர் ஜெயக்குமார் மற்றும் ஓட்டுநர் சுபாஷ் ஆகியோர் மீது நடவடிக்கை எடுத்து தனது பணத்தை மீட்டு தர வேண்டும் என புகார் தெரிவித்துள்ளார்

மேலும் முதலமைச்சர் தனிப்பிரிவு, லஞ்ச ஒழிப்புத்துறை, மற்றும் தேனி மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் விவசாயி சிலம்பரசன் புகார் அளித்துள்ளார்

# வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 22 ந்தேதி நடைபெறவுள்ளது

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்

ஈரோடு மாவட்டத்தில் மே-2026 ஆம் மாதத்திற்கான வேளாண் குறைதீ ர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம்தள கூட்ட அரங்கில் 22.05.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணி முதல் 11.30 வரை மனுக்கள் பெறப்படும். 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்கப் பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்சினைகள் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கலாம். பிற்பகல் 12.30 முதல் 1.30 முடிய அலுவலர்களின் விளக்கங்களும் தெரிவிக்கப்படவுள்ளது. விவசாய பெருமக்கள் கலந்துகொண்டு பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்கிறார்.



## செய்தித்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள ராஜ்மோகனுக்கு

# தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்




பத்திரிகையாளர்களின் நலன், பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் சிறப்பாக செயல்பட்டு, பத்திரிகையாளர்களின் மனதில் என்றும் நிலைத்திருக்கும் சாதனைகளை படைக்க வாழ்த்துகிறோம்.

பத்திரிகையாளர் பாதுகாப்பு சட்டம் இயற்றுதல், பத்திரிகையாளர் நலவாரியத்தை சீரமைத்தல், அரசின் அனைத்து நலத்திட்டங்களும் அனைத்து தரப்பு பத்திரிகையாளர்களும் பயன்பெறும் வகையில் அமைந்திடவும், பத்திரிகைத் துறையில் தற்போது நிலவும் ஏகபோக (Monopoly) முறையை ஒழித்து சிறிய பெரிய என்ற பேதமின்றி அச்சு ஊடகம், காட்சி ஊடகம், பருவ இதழ்கள், மாவட்டம்-தாலுக்காநிருபர்கள் என அனைவருக்கும் சமமான அங்கீகாரம் மற்றும் உரிமைகள் வழங்குதல் உள்ளிட்ட பத்திரிகையாளர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பை தங்களது புதிய அரசு நிறைவேற்றி தர வேண்டும் என தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களது பணிக்காலம் பத்திரிகையாளர்களின் நலனுக்கான\
பொற்காலமாக அமைய மனமார்ந்த வாழ்த்துக்கள்!

பணி சிறக்க வாழ்த்தும்..

S.சரவணன் தலைவர்
9840035480



# இலஞ்சி பிளட் கல்லூரி சிறந்த கல்லூரியாக செயல்படுகிறது அரசு கல்லூரி தமிழ்த்துறை தலைவர் பாராட்டு

இலஞ்சி பிளட் கல்லூரி சிறந்த ஆசிரியர் பயிற்சி கல்லூரியாக செயற்பட்டு வருவதாக சுரண்டை காமராஜர் அரசு கலைக் கல்லூரி தமிழ்துறை தலைவர் திருநாவுக்கரசு பாராட்டி பேசினார்

தென்காசி மாவட்டம் இலஞ்சியில் உள்ள டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் கல்லூரி தின விழா நடைபெற்றது.

விழாவிற்கு கல்லூரி தாளாளர் ராஜகுமார் தலைமை வகித்தார் விழா ஒருங்கிணைப்பாளர் ஐரீன் வரவேற்றார் முதல்வர் (பொ) ஷீலா நவரோஸ் ஆண்டறிக்கை வாசித்தார். சுரண்டை காமராஜர் அரசு கலைக் கல்லூரி தமிழ்துறை தலைவர் திருநாவுக்கரசு விழா பேரூரையாற்றி கல்வி மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

அப்போது அவர் கூறியதாவது உலகத்தில் உள்ள எல்லா பணிகளையும் விட ஆசிரியர் பணி போற்றுதற்குரிய சிறந்த பணியாகும், அனைத்து துறை வித்தகர்களையும் உருவாக்க சிறந்த சமூகத்தை கட்டமைக்கும் பணியாகும்

அந்தபணியினை இந்த இலஞ்சி டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரி சிறப்பாக செய்கிறது என பாராட்டி பேசினார்

விழாவில் குத்துக்கல்வலசை செயின்ட் மேரிஸ் பள்ளி தலைமையாசிரியர் கருப்பசாமி, திசையன்விளை சமாரியா மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் (ஓய்வு) அதிசய ராஜ் ஆகியோர் வாழ்த்தி பேசினர் தொடர்ந்து மாணவ ஆசிரியர் கலை நிகழ்ச்சிகள் நடந்தன

கல்லூரி பேராசிரியர்கள் லீதியாள் சொர்ண ஜெயா, ராஜேஸ்வரி, ஜேபாஎபனேசர், அனிதா உடற்கல்வி ஆசிரியர் ஜசக் ஜான்சன் நூலகர் ஏஞ்சலின், அலுவலக பணியாளர்கள் பிரெட்ரிக், ஷேரோன், பேதுரு லட்சுமி மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர் முடிவில் பேராசிரியர் ஜெனிபர் நன்றி கூறினார் தொடர்ந்து மாணவ ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன

# தேர்தல் தோல்வி விரக்தியில் தூத்துக்குடி மக்களைப் பொதுவெளியில் குற்றம் சாட்டுவதையோ, அவர்களின் ஜனநாயக உரிமையைக் கொச்சைப் படுத்துவதையோ எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது

## தூத்துக்குடி தொகுதியின் புதிய சட்டமன்ற உறுப்பினர் ஸ்ரீநாத் தெரிவித்துள்ளார்



தேர்தல் தோல்வி விரக்தியில் தூத்துக்குடி மக்களைப்பொதுவெளியில் குற்றம் சாட்டுவதையோ, அவர்களின் ஜனநாயக உரிமையைக் கொச்சைப் படுத்துவதையோ எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தூத்துக்குடி தொகுதியின் புதிய சட்டமன்ற உறுப்பினர் ஸ்ரீநாத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் "நேற்று சமூகவலைதளங்களில் முன்னாள் அமைச்சரும், தூத்துக்குடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சகோதரி திருமதி கீதா ஜீவன் அவர்களின் பதிவு ஒன்றைக் கண்டேன். அதில், தூத்துக்குடி மக்களுக்கு ஏதோ அரசியல் சிந்தனையே இல்லாதது போலவும், மக்களெல்லாம் முட்டாள்கள் என்பது போலவும் அவர் சித்தரித்துள்ளார்.

தான் செய்த பணிக்கு மக்கள் தனக்கு வாக்கு அளிக்கவில்லை என அவர் விரக்தியின் உச்சத்தில் புலம்பி இருப்பதைப் பார்த்து நான் பெரும் அதிர்ச்சி அடைந்தேன். இரண்டு முறை தமிழக அமைச்சராக இருந்த ஒரு பொறுப்பான சகோதரி, பொதுவெளியில் வாக்களித்த சொந்த மக்களையே குற்றம் சாட்டுவது கண்டிக்கத்தக்கது. ஜனநாயகம் என்பது மக்கள் தங்களுக்கு யாரை விரும்புகிறார்களோ, அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முழுமையான உரிமையைக் கொடுத்துள்ளது. அதன் அடிப்படையில்தான் தூத்துக்குடி மக்கள் என்னைத் தங்களது சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட ஜனநாயகப்படி என்ன தகுதி வேண்டுமோ, அத்தனை தகுதிகளும் என்னிடம் இருக்கிறது; அதனால்தான் மக்கள் எனக்கு இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்.

ஆனால், எனது திறமை என்ன, மக்கள் நலனில் எனது பணி என்ன என்பதை இன்னும் அளவிடக் கூடத் தொடங்காமல், போகிற போக்கில் சேற்றை வாரி இறைப்பது போல் மக்கள் மீதும், என் மீதும் குற்றச்சாட்டைச் சுமத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் "மீண்டும் சகோதரி கீதா ஜீவன் அவர்களையே மக்கள் தேர்ந்தெடுப்பார்கள், அதன் மூலம் தனக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொள்ளலாம் என்று நினைத்திருந்த சில சக்திகளுக்குத் தூத்துக்குடி மக்களின் இந்தத் தீர்ப்பு மிகப்பெரிய அதிர்ச்சியைத் தந்துள்ளது. மக்களின் இந்த நம்பிக்கையை வீணடிக்காமல், தூத்துக்குடி தொகுதிக்குரிய மக்கள் பணிகளைச் மிகச் சிறப்பாகச் செய்து அதை நான் களத்தில் நிரூபிப்பேன் என்பதைத் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இருப்பினும், அன்புச் சகோதரி திருமதி கீதா ஜீவன் அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்" என அறிக்கையில் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் புதிய அமைச்சரவை பொறுப்பேற்றுள்ள சூழலில், தூத்துக்குடி மண்ணில் முன்னாள் அமைச்சருக்கும், தற்போதைய புதிய சட்டமன்ற உறுப்பினருக்கும் இடையே வெடித்துள்ள இந்த நேரடி 'அறிக்கை போர்' உள்ளூர் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பிரதமரின் அறிவுரைகள் மக்களின் மனதிலும் தங்களது எதிர்காலம் குறித்த அச்சத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது; கனிமொழி எம்.பி. குற்றச்சாட்டு



நாடு கடுமையான பொருளாதாரச் சிக்கலைச் சந்தித்து வரும் வேளையில், பொறுப்பான பதவியில் இருக்கும் பிரதமரே வாகனப்பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளச் சொல்வது மக்களிடையே எதிர்காலம் குறித்த அச்சத்தையும், பெரும் கேள்விக் குறியையும் உருவாக்கியுள்ளதாகத் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. குற்றம் சாட்டியுள்ளார்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று நெல்லையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராகத் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. கலந்துகொண்டார். முன்னதாக, செய்தியாளர்களைச் சந்தித்த அவர் தற்போதைய ஒன்றிய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் குறித்துக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

செய்தியாளர்கள் சந்திப்பில் கனிமொழி எம்.பி. பேசியதாவது: "தற்போது சமையல் கேஸ் சிலிண்டர் கிடைப்பதே சாதாரண மக்களுக்கு மிகப்பெரிய கேள்விக்குறியாக மாறியுள்ளது. இதனால் அடித்தட்டு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய இக்கட்டான சூழலில், பெட்ரோல் மற்றும் டீசல் விலையும் தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது. எரிபொருள் விலை உயர்வால் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் கிடுகிடுவென உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பும் தொடர்ந்து சரிவைச் சந்தித்து வருகிறது. ஒட்டுமொத்தமாக நாம் ஒரு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம்.

பொறுப்புமிக்க பதவியில் இருக்கும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர், நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதைவிடுத்து, மக்களுக்கு மட்டுமே தொடர்ந்து கட்டுப்பாடுகளையும் அறிவுரைகளையும் வழங்கி வருகிறார்கள். மக்களை எப்போதும் ஒருவித பதற்றத்திலேயே வைத்திருக்கக் கூடிய விஷயங்களைத்தான் அவர்கள் பேசி வருகிறார்கள்.

குறிப்பாக, பெட்ரோல் மற்றும் டீசலில் இயங்கும் வாகனங்களின் பயன்பாட்டை மக்கள் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடி கூறியிருப்பது, அனைத்துத் தரப்பு மக்களின் மனதிலும் தங்களது எதிர்காலம் குறித்த அச்சத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது." என்று கனிமொழி எம்.பி. தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, தமிழகத்தில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அரசின் செயல்பாடுகள் எவ்வாறு உள்ளது? என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, சுருக்கமாகப் பதிலளித்த கனிமொழி எம்.பி., "இப்போதுதான் அவர்கள் முறைப்படி பொறுப்பேற்றுள்ளார்கள்" என்று மட்டும் கூறி விடைபெற்றார்.

இந்நிகழ்வின் போது நெல்லைமத்தியமாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் அப்துல் வகாப் எம்.எல்.ஏ., நெல்லை மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், முன்னாள் மேயர் சரவணன் மற்றும் வர்த்தக அணி மாநில இணைச் செயலாளர் மாலை ராஜா உள்ளிட்ட முக்கிய தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# தி.மு.க. தோல்வியை மறைக்கவே சனாதனப் பேச்சு கோவையில் உதயநிதிக்கு எதிராக 'இந்து முன்னணி' கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்



தமிழ்நாடு சட்டமன்றத்தில் புதிய சபாநாயகராக தேர்வு செய்யப்பட்ட ஜே.சி.டி.பிரபாகர் வாழ்த்தி பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், சனாதனத்தை அதாவது இந்து மதம் ஒழிக்கப்பட வேண்டும் என பேசி உள்ளதை கண்டித்து தமிழக முழுவதும் இந்து முன்னணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக சிவானந்த காலனி, பவர் ஹவுஸ் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் இந்து முன்னணி மாநில செயலாளர் கிஷோர் குமார், பா.ஜ.க தேசிய சிறுபான்மை யினர் பிரிவு செயலாளர் வேலூர் இப்ராஹிம் உள்பட ஏராளமான கலந்து கொண்டனர். சமாதானத்தை ஒழிப்பேன் என்று கூறிய எதிர்க்கட்சிதலைவர் உதயநிதி ஸ்டாலினை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பினர் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த இந்து முன்னணி மாநில செயலாளர் கிஷோர் குமார் பேசும்போது சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் படுதோல்வி அடைந்து உள்ளதாகவும், தமிழகத்தினுடைய முதலமைச்சர் ஆக இருந்த மு க ஸ்டாலின் தோற்கடிக்கப்பட்டார் என்றும், இந்த தோல்வி மறைப்பதற்காக சட்டமன்றத்தில் பேசுகின்ற போது அந்த கட்சியினுடைய எதிர்க்கட்சியின் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சனாதன தர்மத்தை அழிக்க வேண்டும் என்று பேசி உள்ளார். அதை பேச வேண்டிய அவசியம் இல்லை, சட்டசபையில் அடுத்த ஐந்தாண்டு காலம் ஆட்சியில் மக்களுக்கு என்ன? செய்ய வேண்டும் என்பதை பேசாமல், பிரச்சனையை கிளப்பி உள்ளதாகவும், காரணம் என்னவென்றால் தோல்வியை மறைப்பதற்காக என்றும், எப்பொழுதெல்லாம் தி.மு.க விற்கு தோல்வி வருகிறதோ, ஒன்று இந்தி எதிர்ப்பு எடுப்பார்கள் அல்லது இந்து எதிர்ப்பு எடுப்பார்கள். ஏற்கனவே உதயநிதி மீது பல்வேறு மாநிலங்களில் வழக்கு உள்ளதாகவும், கர்நாடகா மாநிலத்தில் ஒரு லட்ச ரூபாய் கட்டி ஜாமீனில் வெளியே வந்து உள்ளதாக கூறியவர், அதனால் சட்டசபையில் ஒளிந்து கொண்டு பேசுவதாகவும், மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டு உள்ளதாக கூறியவர், நாடு முழுவதும் இந்த பிரச்சனை எழுந்து உள்ளது என்றும், தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்துவதாகவும், உதயநிதி கைது செய்ய வேண்டும் என்றும், எதற்காக வேண்டி இப்பொழுது பேசுகிறார். இந்த ஆட்சி என்ன நடக்கிறது, ஆட்சிக்கு வழி விட வேண்டும் என்றும், தோல்வியை பொறுப்பேற்காமல் அதற்கு மாறாக மக்கள் மத்தியில் ஒரு வன்மத்தை கிளப்ப வேண்டும், மத துர்பிஷரோகம் செய்ய வேண்டும் என்று முயற்சி செய்வதாகவும், உடனடியாக இதை கண்டித்து தமிழக முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருவதாகவும் கூறினார். இந்த நிகழ்ச்சியில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் சதீஷ், கோவை கோட்ட பொதுச்செயலாளர் பாபா கிருஷ்ணன், கோவை கோட்ட செயலாளர் உருவை பாலன், ராஜ்குமார், பாலகிருஷ்ணன், அசோக் குமார், மாவட்ட செய்தி தொடர்பாளர் தனபால், உட்பட 3500 க்கும் மேற்பட்ட கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை ராயல் கேர் மருத்துவமனை செவிலியர்கள் சர்வதேச அளவில் உயரிய விருதான 'டெய்சி' விருது பெற்று அசத்தல்



பல்வேறு வெளிநாட்டு மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களை தேர்வு செய்து வழங்கப்பட்டு வந்த டெய்சி விருதுகள் இந்தியாவில் முதன் முறையாக கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள ராயல் கேர் மருத்துவமனை செவிலியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு சர்வதேச தரச்சான்றுகள் மற்றும் அங்கீகாரங்களைப் பெற்றுள்ள ராயல் கேர் மருத்துவமனைக்கு கூடுதல் பெருமை சேர்க்கும் விதமாக வும், இந்திய செவிலியர்களை சர்வதேச அளவில் அங்கீகரிக்கும் விதமாக நாட்டில் முதல் முறையாக கோவையில் செவிலியர்களுக்கான டெய்சி விருது வழங்கும் விழா நடைபெற்றது... ராயல் கேர் மல்டி ஸ்பெஷாலிட்டி, மருத்துவமனையின் தலைவர் டாக்டர் மாதேஸ்வரன் விழாவில், தமிழ்நாடு செவிலியர் கவுன்சில் பதிவாளர் டாக்டர் சங்கர் சண்முகம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தேர்வு செய்யப்பட்ட ஆறு செவிலியர்களுக்கு டெய்சி விருதுகள் வழங்கி கவுரவித்தார்.. பல்வேறு மருத்துவ பிரிவுகளில் பணியாற்றும் விருது பெற்ற செவிலியர்களுக்கு முன்னதாக வெண்மை மலர் கிரீடம் சூட்டப்பட்டது.. தொடர்ந்து ஜிம்பாப்வே நாட்டு கலைஞர்களின் கையால் வடிவமைக்கப்பட்ட, தி ஹீலிங் டச் எனும் ஒரே கல்லால் ஆன சிற்பம் மற்றும் செவிலியர்கள் தங்களது சீருடையில் அணியக்கூடிய, சர்வதேச அங்கீகாரத்தின் அடையாளமாக பேட்ஜ் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.. விழாவில் பேசிய, டாக்டர் மாதேஸ்வரன், எங்கள் மருத்துவமனை செவிலியர் அணியை வலுப்படுத்துவதிலும், அவர்களுக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதிலும் நிர்வாகம் உறுதியாக இருப்பதாக தெரிவித்தார்.. நோயாளிகளை முழுமையாக குணப்படுத்துவதில் செவிலியர்களுக்கு முக்கிய பங்கு இருப்பதாக தெரிவித்த அவர்,

விருது பெற்ற செவிலியர்கள் வரும் காலங்களில் ராயல் கேர் மருத்துவமனையின் வெளிநாட்டு நோயாளிகள் மருத்துவ பிரிவில் பணியாற்ற வாய்ப்பு வழங்கப்படும் என தெரிவித்தார்.. விழாவில், செவிலியர் பிரிவின் இயக்குநர் டாக்டர் சியாமளா குமார், உட்பட ராயல் கேர் மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள், அலுவலக நிர்வாகிகள், செவிலியர்கள், பல்வேறு துறை சார்ந்த ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிட த்தக்கது.

முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி பொதுச்செயலாளர் எடப்பாடி சந்திப்பு எதிரொலி?

# தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளர் நீக்கம்



நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத்தின் 17 வது பொதுத் தேர்தலில் தென்காசி மாவட்டத்தில் உள்ள ஐந்து தொகுதிகளில் அதிமுகசார்பில்நான்குபேரும் கூட்டணிக் கட்சி சார்பில் ஒருவரும் போட்டியிட்டனர் இந்நிலையில் அதிமுக சார்பில் சங்கரன்கோவில் தனி தொகுதியில் போட்டியிட்ட திலீபன் ஜெய்சங்கர் மட்டும் வெற்றி பெற்றார் தென்காசி பொதுத் தொகுதியில் போட்டியிட்ட தெற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செல்வ மோகன் தாஸ் பாண்டியன் திமுக சார்பில் போட்டியிட்ட அன்பகம் கலை அவர்களின் முதல்வர் டாக்டர் கலை கதிரவனிடம் வெற்றி வாய்ப்பை இழந்தார் அதேபோன்றுகடையநல்லூர் சட்டமன்ற பொதுதொகுதியில்போட்டியிட்ட வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்முன்னாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மறைந்த செந்தூர் பாண்டியன் அவர்களின் மகன் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பாமதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உதய சூரியன் தினத்தில் போட்டியிட்ட திமு ராசேந்திரன் இடம் வெற்றி வாய்ப்பை இழந்தார்அதேபோன்று ஆலங்குளம் தொகுதியில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே ஆர் பிரபாகரன் ஆலங்குளம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி எச் மனோஜ் பால்பாண்டியன் அவர்களிடம் வெற்றி வாய்ப்பு இழந்தார் அதேபோன்று வாசுதேவநல்லூர் (தனி)சட்டமன்றத் தொகுதியில் ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்ட பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த மாவட்ட தலைவர் ஆனந்தன் ஐயா சாமி சங்கரன்கோவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜா அவர்களிடம் வெற்றி வாய்ப்பை இழந்தார் மீதமுள்ள சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட சங்கை கணேசன் என்பவரை தோற்கடித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திலீபன் ஜெய்சங்கர் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினர் ஆனார் கடந்த பத்தாம் தேதிதமிழக முதல்வராக ஜோசப் விஜய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற காங்கிரஸ் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க் லிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெற்று பதவி ஏற்றதைத் தொடர்ந்து அண்ணா திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 47 சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னாள் முதல்வரும் அதிமுகபொதுச் செயலாளர் ஆன எடப்பாடி கே பழனிச்சாமி தலைமையில் 22 பேரும் முன்னாள் அமைச்சர்கள் சி.வி சண்முகம் எஸ் பி வேலுமணி விஜய பாஸ்க ர்புதுமுகமான லாட்டரிஅதிபர் மார்ட்டின் மனைவி லீமா ரோஸ் (த.வெ.க. அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மனைவியின் தாயார்) ஆகியோரது தலைமையில் 25 அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களும் இரு அணிகளாக இணைந்து சட்டமன்றத்தில் செயல்பட்டு வருகின்றனர் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா வின் ஆலோசனையின் பேரில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு எதிராக செயல்பட்டுவதாக கருதி தொண்டர்கள் தலைமைக்கு தகவல் அனுப்பினர் மேலும் கடந்த சட்டமன்ற தேர்தலின் போது முன்னாள் அமைச்சர் சங்கரன்கோவில் சேர்ந்த ராஜ லட்சுமி அவர்களுக்குசங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக கிடைக்க வேண்டிய வாய்ப்பைமாவட்டக் கழகச் செயலாளர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா தடுத்ததாகவும் தொண்டர்களிடையே பரபரப்பாக பேசப்பட்டது அதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு பொறுப்பாளராக செயல்பட்டார் இந்நிலையில் அண்ணா திமுகபொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களை முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார் அந்த நிமிடத்தில் இருந்து சுமார் ஒரு மணி நேரத்திற்குள் வடக்கு மாவட்ட கழக செயலாளர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பாவின் பதவி பறிக்கப்பட்டதாக செய்திகள் உலா வந்தது திடீரென அதிமுக தலைமை கழக கடிதம்உறுதி செய்தது தற்போது முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி அவர்கள் தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர் தென்காசி மாவட்டத்தில் இதுவரை மாவட்ட கழக செயலாளராக தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தை சார்ந்த யாருக்கும் வாய்ப்பு வழங்கப்படாததால் இந்த வாய்ப்பை அவருக்கு வழங்க வேண்டுமென வாட்ஸ் அப் மற்றும் முகநூல் ஆகியவற்றில் தொண்டர்கள் கருத்து கூறி வருகின்றனர்அமைச்சர் ராஜலட்சுமி அவர்களுக்கு மாவட்ட கழகசெயலாளர்பொறுப்பு வழங்கப்படுமா அல்லது வேறு யாருக்கும் வழங்கப்படுமா என்பதை அதிமுக தொண்டர்கள் எதிர்பார்த்து வருகின்றனர்



## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்நேற்று(18.05.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, மகளிர் உரிமைத்தொகை,மேல்நிலை நீர்தேக்க தொட்டி, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, தெரு விளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 285 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், மாவட்ட பிற்படு த்தப்பட்டோர் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜாகீர் உசேன் மற்றும் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்

## கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கஞ்சா மற்றும் தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் தடுப்பது குறித்த வாராந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது



தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, ஈரோடு மாவட்டத்தில் பேருந்து நிலையம், மதவழிபாட்டு தலங்கள், கல்வி நிலையங்களுக்கு அருகில் 500 மீட்டர் வரம்பிற்குள் செயல்படும் மதுபானக்கடைகள் தணிக்கை செய்யப்பட்டதில் இதுவரை 37 கடைகள் மூடப்பட்டுள்ளது. சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை கள் ஏற்படும் கடைகள் மூடுவதும் தொடர்பாகவும் மற்றும் 500 மீட்டர் வரம்பிற்குள் செயல்படும் மதுபானக்கடைகள் வட்டாட்சியர்கள் மூலம் அறிக்கை பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் கடந்த வாரம் Toddy (கள்) – 7.500 Litres, கஞ்சா 8.460 கிலோ கிராம், கஞ்சா சாக்லேட் எண்ணிக்கை 310, முறையற்ற முறையில் விற்பனை செய்யப்பட்ட தமிழ்நாடு IMFS Bottles (மதுபான பாட்டில்கள்) 291 மற்றும் வெளிமாநில மது பாட்டில்கள் 33 (6.005 Litres) கைப்பற்றப்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் 29.268 கிலோ கிராம் காவல்துறை, உணவுப்பாதுகாப்புத்துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சுகாதாரத்துறையின் மூலம் கைப்பற்றப்பட்டுள்ளது. - மேலும் போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பான நிகழ்ச்சிகள் 16 இடங்களில் நடத்தப்பட்டுள்ளது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் போதைப்பொருள் தடுப்பு படை ஈரோடு மாவட்டத்தில் முதலமைச்சர் உத்தரவின்படி செயல்பட்டு வருகிறது எனவும், டாஸ்மாக் கடைகள் மற்றும் போதைப்பொருட்கள் கூட்டுப்புலத்தணிக்கையின் மூலம் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு மதுபானக்கடைகள் செயல்படுவதை உறுதி செய்யவும், தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றுதல் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவும் அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி , டாஸ்மாக்மேலாளர் ரகுநாதன், உதவி ஆணையர் (கலால்) தியாகராஜன் உட்பட பலர் உள்ளனர்.

## வருகிற 22 ந் தேதி சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

### ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தகவல்




ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறிவழிகாட்டும் மையத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் வெள்ளிக்கிழமை அன்று தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் சிறப்பாக நடை ழ்பெற்று வருகிறது.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு தனியார்துறை வேலை அளிப்பவர்கள் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவையான எழுதப்படிக்க தெரிந்த நபர்கள் முதல் பட்டப்படிப்பு படித்த நபர்கள் வரை மற்றும் செவிலியர்கள், டெய்லர்கள், கணினி இயக்குபவர்கள்,தட்டச்சர்கள்,ஓட்டுநர்கள் போன்ற பணிகளுக்கு தகுதியுள்ள நபர்களை தேர்வு செய்து தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டு வருகின்றனர். இதன் மூலம் மாதந்தோறும் 100 க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும், திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களும் கலந்துகொண்டு திறன் பயிற்சிக்கு தேவையான நபர்களை தேர்வு செய்து பயிற்சி அளித்து வருகின்றனர்.அதன் படி இம்மாதம் 22.05.2026 வெள்ளிக்கிழமை அன்று சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்புமுகாம் காலை 10.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறவுள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வாயிலாக நடத்தப்படும் இவ்வேலைவாய்ப்புமுகாம், வேலைநாடுர்கள் மற்றும் வேலை அளிப்பவர்களுக்கு முற்றிலும் இலவசமாக செயல்படுத்தப்படுகிறது. எனவே, ஈரோடு மாவட்டத்தில் தனியார்துறையில் பணிபுரிய ஆர்வமாக உள்ள அனைவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறும், இம்முகாமின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்படும் வேலைநாடுநர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவுஎண் இரத்து செய்யப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரிலோ 9499055942 அல்லது தொலைபேசி எண் 8675412356, : மின்னஞ்சல் முகவரி erodemegajobfair@gmail.com மற்றும் decgc_erode என்ற Instagram Page வாயிலாகவும் தொடர்புகொள்ளலாம். என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.



தமிழக வெற்றி கழகத்தின் ஒருங்கிணைப்பாளரும் அமைச்சருமான கே.ஏ.செங்கோட்டையனை, ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் குள்ளம்பாளையத்தில் உள்ள அவரது இல்லத்தில் கோவை சரக டிஐஜி சுவாமிநாதன் ஐபிஎஸ் நேற்று நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். சட்டம் ஒழுங்கு தொடர்பான நடவடிக்கைகள் குறித்து விவாதம் செய்தனர். இந்த நிகழ்வின் போது ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கிரண் சுருதி உடன் இருந்தார்.



ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் கரட்டடிபாளையத்தில் உள்ள ஈரோடு வடக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் (மே.17) அன்று காலை மாவட்ட கழக அவைத் தலைவர் பெருமாள்சாமி தலைமையில், மாவட்ட செயற்குழு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் நல்லசிவம் கலந்து கொண்டு ஆக்கப் பணிகள் மற்றும் கள் ஆய்வு குறித்த ஆலோசனைகளை வழங்கினார். மாநில மாவட்ட, ஒன்றிய நகர, பேரூர் கழக திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் சென்னிமலை சாலையில் உள்ள காசிபாளையம் பகுதியில் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் மேம்பாலத்தை ஈரோடு மேற்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த்மோகன்நேற்று முன்தினம்நேரில்ஆய்வுசெய்தார். அப்பொழுது பால பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்தனர். இந்த ஆய்வின்போது அதிகாரிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்ட கிழக்கு தொகுதி சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தவெக எம்.எல்.ஏ விஜய்பாலாஜி, ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட அன்னை சத்யா நகர் பகுதியில் நன்றி தெரிவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. விஜய் பாலாஜியோடு கட்சியின் முக்கிய நிர்வாகிகளும்கலந்துகொண்டஇந்நிகழ்வில்நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் தவெகவுக்கு வாக்களித்ததற்காக நன்றி தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (18.05.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.



ஈரோடு மாவட்டம் சென்னிமலை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில், ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் சு.முத்துசாமி, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்த பொதுமக்களை (மே.17) அன்று சந்தித்து நன்றி தெரிவித்தார். நிகழ்வில் திமுக முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.